# தினகரன் (19.09.2023)

தமிழ்நாடு காகித ஆலை

# கல்வி பணிக்கு ரூ.13 லட்சம் ஒதுக்கீடு



தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை செயல் இயக்குனர் சீனிவாசன், பொதுமேலாளர் செல்வன், முதுநிலை மேலாளர் சிவகுமார் ஆகியோர் மாணவ மாணவி சீருடை வழங்கினர்.

வேலாயுதம்பாளையம், செப். 19: கரூர் மாவட்டம் புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் ஆண்டுதோறும் புகழூர் நகராட்சிக்குட்பட்ட ஓனவாக்கல் மேடு கிராமத்தை சேர்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளை தேர்ந்தெடுத்து தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் பள்ளியில் இலவச கல்வி வழங்குகிறது. ஓனவாக்கல் மேடு கிராமத்தைச் சேர்ந்த 38 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் 2023- 2024ம் கல்வியாண்டில் எல்கேஜி முதல் 12ம் வகுப்பு வரை இலவச பள்ளிக் கல்வி பயின்று வருகின்றனர்.

இலவச கல்வி பெரும் குழந்தைகளுக்கு 2 செட் பள்ளி சீருடைகள், காலனி, காலனி உறை மற்றும் பள்ளி கட்டணம் முழுவதும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

குழந்தைகளுக்கு எல்.கே.ஜி முதல் 12ம் வகுப்பு வரை இலவச பள்ளிக் கல்வியும், இவர்களுக்கான பள்ளி கட்டணம் உட்பட அனைத்து செலவினங்களையும் டி.என்.பி.எல். காகிதநிறுவனத்தின் மூலம் பள்ளி நிர்வாகத்திற்கு செலுத்தும் 2007 -2008ம் ஆண்டு முதல் துவங்கி நடைபெற்று வருகிறது. மேலும் இந்த கல்வியாண்டில் 38 குழந்தைகள் பயின்று வருகின்றனர். இத் திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.13 லட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி சேஷாயி இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜியில் காகித பிரிவில் 3 1/2 ஆண்டுகால கட்டணமில்லா தொழில்நுட்ப பட்டய படிப்பு பயில ஆண்டுதோறும் 5 மாணவர்களுக்கு கல்வி, விடுதி கட்டணம் உட்பட அனைத்து கட்டணங்களையும் செலுத்தி காகித ஆலை நிறுவனம் கட்டணம் இல்லா கல்வி அளித்து வருகிறது.

கரூர் மாவட்டத்தில் டிஎன்பிஎல் காகித ஆலை அழகு -1 ஐ சுற்றி உள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் என்.புகளூர், புன்னம், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, வேட்டமங்கலம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை அழகு-2 ஐ சுற்றியுள்ள மொண்டி செட்டிப்பட்டி, கே.பெரியபட்டி, சித்தாநத்தம் மற்றும் பாதிரிப்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்களில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 10ம் வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் அறிவியல் மற்றும் கணித பாடங்களில் பெற்ற சராசரி மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசையின்படி வித்யா, பிரவீன், ராமன் மற்றும் கௌசிக் ஆகிய 4 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 63 மாணவர்கள் கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்பு முடித்து பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். இக்கல்வியாண்டில் 19 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் இலவச தொழிற்கல்வி பயின்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக டிஎன்பிஎல் காகித ஆலை நிறுவனம் தனது சமுதாய நலப்பணித் திட்டத்தின் மூலம் இந்த கல்வியாண்டில் ரூ. 8 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. 38 மாணவர்களுக்கு இலவச பள்ளி சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன செயல் இயக்குநர்( இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனிதவளம் )கலைச்செல்வன் மற்றும் முதுநிலை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு 38 பள்ளி மாணவ மாணவிகளுக்கு பள்ளி சீருடைகளை வழங்கினர்.

**தினமணி (19.09.2023)**

# டிஎன்பிஎல் சார்பில் இலவசக் கல்வி பயில்வோருக்கு அனுமதிக் கடிதம்

கரூர், செப்.18: கரூர் டிஎன்பிஎல் சார்பில் இலவசக் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனுமதி கடிதம் மற்றும் இலவச சீருடை வழங்கும் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

டிஎன்பிஎல் ஆலையின் சமுதாய திட்டத்தின் கீழ் புகழூர் நகராட்சிக்குள்பட்ட ஒனவாய்க்கால்மேடு கிராமத்தின் நலிவடைந்த ஏழைக் குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு டிஎன்பிஎல் பள்ளியில் எல்கேஜி முதல் பிளஸ்2 வரை இலவச கல்வி அளிக்கப்படுகிறது.

மேலும் ஆலையின் சமுதாயத் திட்டத்தின் கீழ் திருச்சி ஷேசசாயி இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் காகிதப்பிரிவில் மூன்றரை ஆண்டு கால கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்பு பயில ஆண்டுதோறும் 5 மாணவர்கள் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கும் இலவச கல்வி வழங்கப்படுகிறது.



கரூர் டிஎன்பிஎல் ஆலையில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் இலவச கல்வி பெறும் மாணவர்களுக்கு அனுமதி கடிதம், பள்ளிச் சீருடை வழங்கிய நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) ஆர்.சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கே.கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவக்குமார்.

இந்தத் திட்டங்களின் தேர்வான மாணவ, மாணவிகளுக்கு கல்வி நிறுவனத்தில் சேர்வதற்கான கடிதம் மற்றும் சீருடை வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில், காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) ஆர்.சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கே.கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவக்குமார் ஆகியோர் பங்கேற்று மாணவ, மாணவிகளுக்கு அனுமதி கடிதம் மற்றும் சீருடைகளை வழங்கினர். நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள், டிஎன்பிஎல் பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காலைக்கதிர் (19.09.2023)**

# டி.என்.பி.எல்., நிறுவனம் சார்பில் சீருடை



■ கரூர் மாவட்டம் புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில், செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடை வழங்கினார்.

**கரூர், செப். 19-**

கரூர் மாவட்டம், புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில், பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன் தலைமை வகித்தார். புகளூர் நகராட்சிக்குட்பட்ட ஓனவாக்கல்மேடு கிராமத்தை சேர்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு, இலவச கல்வி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட, 38 குழந்தைகள் இலவச பள்ளிக்கல்வி பயின்று வருகின்றனர். இலவச கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, 2 செட் பள்ளி சீருடைகள், காலணி, காலணி உறை மற்றும் பள்ளிக்கட்டணம் முழுவதும் வழங்கப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக, குழந்தைகளுக்கு பள்ளி சீருடைகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

இந்து தமிழ் திசை (21.09.2023)



கரூர் டிஎன்பிஎல் சார்பாக நடைபெற்ற நிகழ்வில் திருச்சி சேஷசாயி தொழில்நுட்ப நிறுவன காகிதப் பிரிவில் இலவச தொழில் கல்வி பயில தேர்வான மாணவர்களுக்கு ஆணைகளை வழங்கிய காகித நிறுவன செயல் இயக்குநர் ஆர்.சீனிவாசன், பொதுமேலாளர் கே.கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் கே.எஸ்.சிவக்குமார்.

### டிஎன்பிஎல் சார்பில்

# 4 மாணவர்களுக்கு இலவச தொழில் கல்வி பயில ஆணைகள்

● கரூர்

கரூர் மாவட்டம் புகழூரில் உள்ள தமிழ் நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (டிஎன்பிஎல்) சமுதாய பணிகளில் ஒரு பகுதியாக, ஆண்டுதோறும் புகழூர் நகராட்சிக்குட்பட்ட ஓனவாக்கல்மேட்டைச் சேர்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு டிஎன்பிஎல் பள்ளியில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 2023-2024-ம் கல்வியாண்டில், ஓனவாக்கல்மேட்டைச் சேர்ந்த 38 மாணவ, மாணவிகள் எல்கேஜி முதல் பிளஸ் 2 வரை இலவச பள்ளிக் கல்வி பயின்று வருகின்றனர். இந்த குழந்தைகளுக்கு 2 செட் பள்ளிச் சீருடைகள், காலணி, பள்ளிக் கட்டணம் முழுவதும் டிஎன்பிஎல் மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்துக்கு ஆண்டுதோறும் ரூ.13 லட்சம் செலவிடப்படுகிறது.

இதேபோல, திருச்சி சேஷசாயி தொழில்நுட்ப நிறுவன காகிதப்பிரிவில் மூன்றரை ஆண்டுகள் இலவச தொழில் கல்வி பட்டயப் படிப்பு பயில ஆண்டுதோறும் 5 மாணவர்களுக்கு கல்வி, விடுதி உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் டிஎன்பிஎல் சார்பில் செலுத்தப்படுகிறது.

நிகழாண்டு, இலவச தொழில் கல்வி பயில, புகழூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதன்முறையாக தேர்ச்சி பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில், 10-ம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில், நா.வித்யா, கோ.பிரவீன், ராமன், மு.சு.கவுசிக் ஆகிய 4 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இத்திட்டத்துக்கு ரூ.8 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், டிஎன்பிஎல் வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற விழாவில், காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர்(இயக்கம் எப்ஏசி) கே.சீனிவாசன் 4 மாணவர்களுக்கும் இலவச தொழில் கல்வி பயிற்சிக்கான ஆணைகள் மற்றும் 38 பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைகளை வழங்கினார். பொதுமேலாளர்(மனித வளம்) கே.கலைச்செல்வன், முதுநிலை மேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். ●

# தினத்தந்தி (20.09.2023)



புகளூர் காகித ஆலை சார்பில்

## 38 மாணவ-மாணவிகளுக்கு பள்ளி சீருடைகள் வழங்கல்

நொய்யல், செப்.20-

புகளூர் காகித ஆலை சார்பில் ஆண்டுதோறும் புகளூர் நகராட்சிக்குட்பட்ட ஓனவாக்கல்மேடு கிராமத்தை சேர்ந்த நலிவுற்ற சமுதாயத்தை சேர்ந்த குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு காகித ஆலை நிறுவனம் சார்பில் பள்ளியில் இலவச கல்வி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 2023-2024-ம் கல்வியாண்டில் காகித ஆலை நிர்வாகம் சார்பில் எல்.கே.ஜி. முதல் 12-ம் வகுப்பு வரை இலவச பள்ளிக்கல்வியில் படித்து வரும் ஓனவாக்கல்மேடு கிராமத்தை சேர்ந்த 38 மாணவ-மாணவிகளுக்கு பள்ளி சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சி புகளூர் காகித ஆலை வளாகத்தில் நடைபெற்றது.

இதில், காகித ஆலை நிறுவனத்தின் செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் கலந்து கொண்டு, 38 மாணவ-மாணவிகளுக்கு பள்ளி சீருடைகளை வழங்கினர்.